முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

ஆர்சிஓபி எண். 6/2014

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் இன்று இந்த எ.ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மருதையன் | கிராமம் | : |
| வயது | : 65 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 30-01-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) ராஜா சின்னப்பன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். மற்ற சகோதாரர்களும் எனது நெருங்கிய நண்பர்கள் ஆவார். கலைச்செல்வி ராஜா சின்னப்பனின் மனைவி ஆவார். விஜயலட்சுமி தம்பி ஆறுமுகத்தின் மனைவி ஆவார். சக்தி கார்த்திகா தம்பி ஆறுமுகம்-விஜயலட்சுமியின் மகள் ஆவார். அப்பு என்கிற சுப்பிரமணி இறந்துவிட்டார். 4, 5 மனுதாரர்கள் அப்பு என்கிற சுப்பிரமணியின் மகன்கள் என்றால் சரிதான்.

2) மூன்று சகோதரர்கள் அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். அவர்களது வாரிசுகளை பொறுத்த வரையில் மகன்கள் பற்றி தெரியும். மனுச் சொத்தை சென்னையில் உள்ள ஒரு நபருக்கு அடமானம் வைத்து கடன் பெற்றுக் கொடுத்தேன் என்றால் நான் தான் பத்திரம் வாங்கி, கடன் ஏற்பாடு செய்து கொடுத்தேன். சாட்சி மீண்டும் நானும் உடன் சென்று பணம் மட்டும் கொடுத்தாக பதில் அளிக்கிறார். ரூ.12,00,000/- கொடுக்கப்பட்டது.

3) ராஜா சின்னப்பன் பணத்தை திரும்பக் கொடுக்கவில்லை. தம்பி ஆறுமுகம் இறந்த பின்னிட்டு, பணப் பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் தம்பி ஆறுமுகத்திற்கும் தெரியும் ஆனால் பணம் கொடுப்பதற்குள் இறந்து விட்டார். இந்த விவரத்தை எனது பதில் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மனுச் சொத்துக்கு அருகில் உள்ள வேறு கட்டிடங்களின் வாடகையை நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

4) வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் சகோதரர் 3 பேருக்கும் தெரியும். மருத்துவர் ஜெயராமுக்கும் இது பற்றி தெரியும். ராஜா சின்னப்பனின் வகுப்பு தோழர் தான் மருத்துவர் ஜெயராமன் ஆவார். மேற்சொன்ன 4 பேர் தவிர வாடகை விவரங்கள் வேறு யாருக்கும் தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. செல்விக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் வாடகை பேசும்போது அவர் இல்லை.

5) வாடகை பற்றிய விவரம் எங்கு வைத்து பேசப்பட்டது என்றால் மருத்துவர் ஜெயராமின் டிஸ்பென்சரியில் வைத்து பேசப்பட்டது. வாடகை ஒப்பந்தம் ஜெயராமனின் டிஸ்பென்சரியில் வைத்து தயார் செய்யப்பட்டதாக குறிப்பிட்டு எதுவும் இல்லை என்றால் சரிதான். பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது. மனுச் சொத்தில் 5 மனுதாரர்களுக்கு உரிமையில்லை என்று பதில் வழக்குரையில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

6) நான் இருசக்கர வாகனங்களுக்கு பைனான்ஸ் செய்து வருகிறேன். முறையாக கணக்குகள் மூலமாகத் தான் வரவு செலவு செய்து வருகிறேன். பதிவு செய்யாமல், வரவு செலவு எதுவும் செய்வதில்லை என்றால் சரிதான். வருமான வரி கணக்குகள் நான் முறையாக தாக்கல் செய்திருக்கிறேன். எனது நிதி

நிறுவனம் லாபகரமாக இயங்கி வருகிறது என்றால் கடந்த 10 வருடங்களாக குறைந்து விட்டது. என்னுடைய லாப விவரங்களை ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

7) எந்தெந்த தேதிகளில் வாடகை கொடுத்தார்கள் என்றால் ராஜா சின்னப்பன் வாடகையை வாங்கி வந்தார். அவர் இல்லை எனில் அப்பு என்கிற சுப்பிரமணி வாடகை வாங்கி வந்தார். எந்த தேதிகளில் குறிப்பிட்டு வாடகையை வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. வாடகை கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. நான் இல்லை என்றாலும் எனது அலுவலகத்தில் வாடகையை கொடுத்து விடுவார்கள். போன் மூலமாக கேட்டு, என் அலுவலகத்தில் வாடகையை கொடுத்து விடுவார்கள்.

8) வாடகை கொடுத்த விவரங்களை எனது வரவு செலவு கணக்குளில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். எனது கணக்கு ஆவணங்களில் வாடகை கொடுத்தது தொடர்பான விவரங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. அப்பு என்கிற சுப்பிரமணிய வாடகை பெற்றபோது, வவுச்சர்களில் கையெழுத்து பெறுவோம் என்றால் இல்லை. வாடகையை செலுத்தி விட்டேன் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு என்னை சார்ந்தது என்றால் சரியல்ல.

9) என் சொத்துக்கு மேல்புறமுள்ள சொத்தை அப்பு என்கிற சுப்பிரமணி விற்று விட்டார் என்றால் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தான் எனக்கு தெரியும். மனுச் சொத்து தவிர இதர சொத்துக்கள் பாகபிரிவினை செய்யப்பட்ட விவரங்கள் பொறுத்து எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் தெரியும். ஆனால் எதிருரையில் பாகப்பிரிவினை பற்றிய விவரங்கள் தெரியாது என்று சொல்லி

இருக்கிறேன் என்றால் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியாது.

10) பாகப்பிரிவினை ஏற்பட்டு, தீர்ப்பு ஏற்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

(கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் குறுக்கு விசாரணைக்காக மனு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.01.30 17:13:21 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.